**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2023 P.W.1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. டானி சாலோமன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1, 2, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். 01.08.2023 ம் தேதி காலை 09.00 மணியளவில் நெல்லிவிளையில் புதிதாக ஐஸ் பிளாண்ட் ஒன்று தொடங்குவதற்காக இ.பி. யில் கேட்டு டிரான்ஸ்பார்மர் வைப்பதற்காக திண்டுஒன்று கட்டிக்கேட்டிருந்தார்கள். நான் என்னுடைய இடமான சர்வே எண் 511/9A2, 512/2013 ல் ஆட்களை வைத்து வேலைச் செய்துக்கொண்டிருந்தேன்.

2. அப்போது 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஜோயல் பெலிக்ஸ் என்பவர் அங்கு வந்தார். அவர் டிரான்ஸ்பார்மர் வைக்கக்கூடாது என்று கூறினார். மேலும், ஐஸ் பிளாண்ட் வைக்கக்கூடாது என்றும் கூறினார். அவருடைய இருசக்கர வாகனத்தில் வெட்டுக்கத்தி ஒன்று அவர் வைத்திருந்தார். அதை எடுத்துக்காட்டி வேலைச்செய்யக்கூடாது என்று என்னைப் பார்த்து மிரட்டினார். அதன் பிறகு 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் போண் செய்து 3 வது குற்றம் சுமத்தப்பட்ட

நபரான ஜாண் யாக்கோபு என்பவரை அழைத்தார். அவர் இருசக்கர வாகனத்தில் 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஆன்றோ லிபின் என்பவரின் வீட்டிற்கு வந்தார்.

3. ஆன்றோ லிபினின் வீட்டிலிருந்து இரண்டு கம்பிகளை 2, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் எடுத்து வந்தார்கள். ஐஸ் பிளாண்ட் வைக்ககூடாது, வைத்தால் உன்னையும் உன் தந்தையையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். உனக்கு இது கனவு, எனக்கு இது கெட்ட கனவு, உன்னை கொன்றாவது ஐஸ் பிளாண்ட்டை வைக்க விடாமல் தடுப்பேன் என்றும், மேலும் புண்டாமவனே என்று அருவருக்கத்தக்க கெட்டவார்த்தைகளால் பேசினார்கள்.

4. ஏற்கனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எங்களுக்கும் பிரச்சினை இருந்ததால் நான் எதுவும் பேசாமல் அவர்கள் செய்வதை வீடியோ எடுத்தேன். உடனே , அவர்கள் கத்தி, கம்பி ஆகியவற்றை மறைத்துக்கொண்டு அங்கிருந்து வாக்குவாதம் செய்துவிட்டு கிளம்பிவிட்டார்கள். அதன் பிறகு சம்பவம் தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் மனுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகும் இதே சம்பவம் தொடர்பாக எனது தந்தையிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கெட்டவார்த்தைகள் பேசி பிரச்சினை செய்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2023 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. டேவிட் ராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1, 2, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா1 ஐ எனக்குத் தெரியும். 01.08.2023 ம் தேதி காலை 09.00 மணியளவில் டிரான்ஸ்பார்மர் வைப்பதற்காக கொத்தனார் வேலையாட்கள் பட்டா பூமியில் வேலைச் செய்துக்கொண்டிருந்த போது, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அங்கு வந்து டிரான்ஸ்பார்மர் வைப்பதற்கு இங்கு எதுவும் கட்டக்கூடாது என்று கம்பியும், வெட்டுக்கத்தி ஆகியவற்றைக் கொண்டு எங்களை மிரட்டினார்கள்.

2. வேலைச் செய்துக்கொண்டிருந்த நாங்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மிரட்டியதால் சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுக்கச் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.